**செய்தி வெளியீடு எண்:99** **நாள்:08.02.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **5.2.2021** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.**110**ன் கீழ் சட்டமன்றப் பேரவையில்,

*"தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற* ***16.43*** *லட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".*

*"மாண்புமிகு அம்மாவின் அரசு தற்போது பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல், அரசாணையையும் வெளியிட்டு, அதற்கான நிதி ஆதாரத்தையும் வருகின்ற நிதிநிலை அறிக்கையிலேயே ஏற்படுத்த உள்ளது என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்வதுடன், இந்த அறிவிப்பு உடனடியாக செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்".*

என தெரிவித்துள்ளார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை உடனடியாக செயல்படுத்தும் விதமாக, இன்று பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான அரசாணைகள் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில், விவசாய பெருமக்களுக்கு கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி சான்றிதழை வழங்க, உள்ளார்கள்.**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**கூட்டுறவு, உணவு மற்றும்**
**நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**